Oslo kommune
**Helseetaten**
Folkehelse- og omsorgsavdelingen

***அணுஉலை மற்றும் கதிரியக்கவிபத்து தயார்நிலையும் அயடின் மாத்திரைகள் விநியோகமும்***

**பாதுகாவலர், பாடசாலைகளில் பணிபுரிபவர்கள், மழலையர்பள்ளிகள், சிறார்- மற்றும் குடும்பநலசேவை வழங்கும் நிலையங்கள் மற்றும் சிறார்கள் பகலில் தங்கியிருக்கும் ஏனைய நிலையங்களில் பணிபுரிவோருக்குமான தகவல்**

அணுஉலை மற்றும் கதிரியக்க சம்பவம் நிகழும் பட்சத்தில் நாடு முழுவதிலும் அயடின் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டி ஏற்படலாம். ஐரோப்பாவின் அணுமின்நிலையங்கள் பழமையடைந்து வருவதால் மோசமான விபத்துக்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் அதிகரிக்கின்றன. அணுசக்திமூலம் இயங்கும் கப்பல்கள் கரையோரப்பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடுவது அதிகரித்து வருகிறது. இவ்வாறான ஒரு கப்பலில் விபத்து ஏற்படும் போது அல்லது ஒரு பயங்கரவாதநடவடிக்கை நிகழும் பட்சத்தில் கதிர்வீச்சு வெளியேற்றத்தால் நோர்வேயும் பாதிக்கப்படலாம்.

அணுக்கதிர்வீச்சு பாதுகாப்பு நடவடிக்கையின் ஒருபகுதியாக ஒஸ்லோ நகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் அனைத்து பொது மற்றும் தனியார் பாடசாலைகள், மழலையர்பள்ளிகள், சிறார்- மற்றும் குடும்ப சேவை நிறுவனங்கள் மற்றும் சிறார் பகலில் தங்கியிருக்கும் நிறுவனங்களிலும் அயடின் மாத்திரைகள் சேமித்து வைக்கப்படுகின்றன. அணுக்கதிர்வீச்சு தொடர்பான ஏதாவது ஒரு சம்பவம் நிகழும் பட்சத்தில் சிறார்களுக்கு அவர்கள் தங்கியிருக்கும் இடத்தில் அயடின் மாத்திரைகள் வழங்கப்படும்.

சிறார்கள் தங்கியிருக்கும் பாடசாலை, மழலையர்பள்ளி அல்லது நிறுவனங்களில் அவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே (பாடசாலை, மழலையர்பள்ளி அல்லது நிறுவனம்) அவர்களுக்கு அயடின் மாத்திரைகளை வழங்க பாதுகாவலரின் முன்ஒப்புதல் அவசியமாகும் .

அணுக்கதிர்வீச்சு சம்பவம் ஏற்படும் பட்சத்தில் உயர்நிலைப்பாடசாலையில் தங்கியிருக்கும் மாணவர்கள் அனைவருக்கும் அயடின் மாத்திரைகள் அங்கே வழங்கப்படும்.

வீட்டில் சேமித்து வைக்க அயடின் மாத்திரைகளை வாங்காதவர்கள் இதனை மருத்துச்சீட்டு இல்லாமல் மருந்துவிற்பனை நிலையத்தில் வாங்கி வைத்திருப்பது பரிந்துரைக்கப்படுகிறது. சம்பவம் நடந்தவுடன் அயடின் மாத்திரைகளை அவரச மருத்துவ சிகிச்சைப்பிரிவில் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் இருக்கிறது.

பாடசாலைகள், மழலையர்பள்ளிகள் மற்றும் நிறுவனங்களில் சேமித்து வைக்கப்படும் அயடின் மாத்திரைகள் அரச மருந்துகள் முகவர் நிலையத்தால் வருடா வருடா பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். பாவனைக்காலம் முடிந்தாலும் மாத்திரைகள் பயனுள்ளவை அத்தோடு பாதுகாப்பானவையும் கூட. பரிசோதனைகள் மூலம் மாத்திரைகள் தரம் குறைந்தவையாக இருப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் மாத்திரைகள் மீளசேகரிக்கப்படுவதுடன் பாவனையிலும் ஈடுபடுத்தப்பட மாட்டாது.

**மாத்திரைகளை பிரதானமாக உட்கொள்ள வேண்டியவர்கள்**
அயடின் மாத்திரைகளை பிரதானமாக உட்கொள்ள வேண்டியவர்கள் 18 வயதுக்குட்பட்ட சிறார்கள், இளம் பருவத்தினர், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோராகும்.
இவர்கள் அயடினை அதிகளவில் பயன் படுத்துகின்றனர், மேலும் இவர்கள் மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் அதிகம் பயனையும் பெறுகின்றனர். விசேட நிலைமைகளில் 18 முதல் 40 வயதிற்குட்பட்ட வளர்ந்தவர்களும் அயடின் மாத்திரைகள் உட்கொள்வது குறித்து ஆலோசனை வழங்கப்படலாம், சுயபாதுகாப்புநடவடிக்கை குறித்து தனியே குறிப்பிட்டுள்ள பகுதியைப் பார்க்கவும்.

**அயடின் மாத்திரைகளைப் பாவித்தல்**

கதிரியக்க அயடினை உட்சுவாசிப்பது தைரொயிட்சுரப்பியில் புற்றுநோய் ஏற்படுவதற்கான அபாயத்தை அதிகரிக்கிறது. கதிரியக்க அயடின் கசிவு ஏற்படும் பட்சத்தில், அயடின் மாத்திரைகள் கதிரியக்க அயடின்

உட்செல்லாது தடுக்கலாம், மேலும் அணுவிபத்து அவசரகாலபாதுகாப்புக்குழு பரிந்துரைக்கும் பல பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக இது இருக்கலாம்.
அயடின் மாத்திரைகள் கதிரியக்க அயடினிலிருந்து மட்டுமே பாதுகாக்கின்றன, மற்றைய கதிரியக்க பொருட்களிலிருந்து பாதுகாப்பை வழங்குவதற்குரியதல்ல. அணுவிபத்து அவசரகால பாதுகாப்புக்குழு அயடின் மாத்திரைகளை உட்கொள்ளும்படி பரிந்துரை வழங்கியதும் எவ்வளவு விரைவில் எடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாகவும் மேலும் காற்று, உணவு மற்றும் / அல்லது பானங்களில் கதிரியக்க அயடின் கசிவு ஏற்பட்டு 4 மணித்தியாலங்களுக்குள்ளும் மாத்திரைகளை உட் கொள்ள வேண்டும்.

***சுயமுன்னேற்பாடு***

அயடின் மாத்திரைகள் மருந்துவிற்பனை நிலையங்களில் மருந்துசீட்டின்றி விற்கப் படுகின்றன. 18 வயதுக்குட்பட்ட சிறார்கள் மற்றும் இளம்பருவத்தினர், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் 40 வயதிற்குட்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள் அயடின் மாத்திரைகளை வாங்கி சேமிப்பது பரிந்துரைக்கப்படுகிறது.

***ஒப்புதல் வழங்குதல்***

அயடின் மாத்திரைகள் பெற்றோரின் முன்அனுமதியுடன் வழங்கப்படலாம். இதனால் பாடசாலைகள், மழலையர்பள்ளிகள் மற்றும் சிறார்கள் பகல்நேரத்தில் தங்கியிருக்கும் நிறுவனங்கள் முன்ஒப்புதலைக் கோருகின்றன.

***எச்சரிக்கை மற்றும் முற்காப்பு விதிகளும்***

- அயடின் மாத்திரைகளை பயன்படுத்துவதால் ஏற்படும் பக்கவிளைவுகளுக்கான ஆபத்து சிறார்கள் மற்றும் இளம் பருவத்தினருக்கு மிகவும் குறைவு
- கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பரிந்துரைக்கப்பட்டதை விட அதிகளவு உட்கொள்வதை தவிர்க்கவும்
- புதிதாக பிறந்த குழந்தைக்கு (ஒரு மாதக்குழந்தை )அயடின் மாத்திரை வழங்குவது தொடர்பாக விசேட முற்காப்புவிதிமுறைகள் செல்லுபடியாகும்
- தைரொயிட்சுரப்பிவீக்கம் (தைரொயிட்சுரப்பி அழற்சி) கொண்டவர்கள், தைரொயிட்சுரப்பி செயற்பாட்டில் கோளாறுகள் அல்லது தோல் அழற்சி (தோல்தடிப்பு நோய்) இருப்பவர்கள் அயடின் மாத்திரைகளை உட்கொள்ளக்கூடாது
- பொட்டாசியம் அயடைட் ஒவ்வாமை அல்லது மருந்துகளிலுள்ள ஏதாவது பொருட்களுக்கு ஒவ்வாமை கொண்டவர்கள் அயடின் மாத்திரைகளை உட்கொள்ளக் கூடாது
- தைரொயிட்சுரப்பியை சத்திரசிகிச்சை மூலம் அகற்றியவர்கள் அயடின் மாத்திரைகளை உட்கொள்ளத் தேவையில்லை

***அணுஉலை மற்றும் கதிர்வீச்சு சம்பவமொன்று ஏற்படும் பட்சத்தில்***

உள்ளே தங்கும் இடங்கள் மற்றும் அயடின் மாத்திரைகளை உட்கொள்வது குறித்து ஆலோசனையை பெறவும். இணையதளம், தொலைக்காட்சி மற்றும் வானொலி வழியாக தகவல்களை அறிந்து கொள்ளவும். அயடின் மாத்திரைகளை உட்கொள்ளும்படி பரிந்துரை செய்யப்பட்டால் **மட்டுமே** அவற்றை உட்கொள்ள வேண்டும்.

***தொடர்புடைய இணையத்தளங்கள்***

நகரசபையின் இணையதளம்: https://www.oslo.kommune.no

கதிர்வீச்சுபாதுகாப்பு மற்றும் அணுபாதுகாப்பு ஆணையகத்தின் இணையத்தளம்:
https://www.dsa.no/atomberedskap